Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 25 | 08-05-2003 | வியாழக்கிழமை | ஓசை 79

வவுனியா நகரில் தரங் குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசர் நகையகம்

வவுனியா.

(சி-7865)

# தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி அரசாங்கம் எந்தவித கவனமும் எடுக்கவில்லை

## தேசியத் தலைவர் பிரபாகரன் ஜப்பான் விசேட தூதுவரிடம் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**சமாதானச் சூழ்நிலையைப் பிரச்சாரமாகப் பயன் படுத்தி உலக நாடுகளிடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்று தென்னிலங்கையை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதே தவிர தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி அரசாங்கம் கவனம் எதையும் எடுக்க வில்லை என நேற்று யப்பானின் விசேட தூதுவருடனான சந்திப்பின் போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வலியுறுத்தினார்.**

நேற்று தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் - ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷிக்கும் இடையிலான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளித்தார். இதில் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு;

இன்றைய சந்திப்பில் புலிகள் தரப்பிற்கு தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும், ஜப்பானியத் தரப்பிற்கு அகாஷி அவர்களும் தலைமை தாங்கி பேச்சுக்களை நடாத்தினார்கள். சுமார் இரண்டு மணி நேரமாக இப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. தமிழ் மக்கள் சார்பாக இன்றைய சூழ்நிலை பற்றி தலைவர் பிரபாகரன் அவர்கள் எடுத்து விளக்கினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)



# பேச்சுக்கள் பயனுள்ளதாக அமைய வேண்டுமாயின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும்

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமைய வேண்டுமாயின் செயற்திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சிரானின் பதினைந்து திட்டங்களை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு சிறிலங்காப் பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார். சிரானிற்கும் சிறிலங்காப்பிரதமர் உத்தர விடுவதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா என செய்தியாளர் கேட்ட போது? அவர் தெரிவிக்கையில் ;

திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவோம் என்று சொன்

(08ஆம் பக்கம் பார்க்க)



# விசேட தூதுவருக்கு தேசியத்தலைவர் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பு

வன்னிக்கு வருகைதந்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்த ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி அவர்களுக்குத் தேசியத்தலைவர் அவர்கள் புலிச்சின்னத்தையும் தமிழீழ வரைபடத்தையும் கொண்ட நினைவுப்பரிசொன்றினை வழங்கிக்கௌரவித்தார் ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி அவர்கள் தேசியத் தலைவர் அவர்களுக்கு நினைவுப் பரிசொன்றினை வழங்கிக்கௌரவித் தார்.

நேற்றுக்காலை 10.00மணியளவில் சிறிலங்காவிமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மத்தி விளையாட்டு அரங்கை வந்தடைந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகா ஆகியோர் அடங்கிய குழுவினரை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து சிறிலங்காப் பிரதமருக்கு தெரியப்படுத்துவேன்

## - ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி தெரிவிப்பு

இரு தரப்பினரும் கலந்து பேசுவதற்கு இன்னும் இடம் இருக்கிறது என நான் நினைக்கிறேன் அவர்களுக்கு ஆர்வம் உண்டு என நான் நினைக்கிறேன். புலிகள் தங்களுக்குள்ள சில குறிப்பிட்ட கவலைகள் குறித்து, அரசுடன் கலந்துரையாட விரும்புகின்றனர். அவர்களுடைய கவலைகளை நான் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியப்படுத்த இருக்கிறேன் என ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்று வன்னிக்கு வருகைதந்து தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து கொழும்பு திரும்பி, பி.பி.சி.க்கு தெரிவிக்கும் போதே மேற்படி

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பான் விசேட தூதுவர் மூலம் புலிகள் ரணிலுக்கு கடிதம்

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு விடுதலைப்புலிகள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். நேற்று வன்னிக்கு வருகை தந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷியிடம் இக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

நேற்று மாலை கொழும்பு திரும்பிய யசுகி அகாஷி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கவிருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

# யாழ்., வவுனியா, மன்னாருக்கு எரிக் சொல் ஹெய்ம் விஜயம்

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்கெய்ம், நேற்று யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று வவுனியாவுக்குச் சென்ற எரிக்சொல் ஹெய்ம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திட்டபின்னர் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட மீள்குடியேற்றம் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகள் தொடர்பாகவும் ஏனைய அபிவிருத்திப் பணிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் தமிழ் - முஸ்லிம் காணிப்பிணக்குகள் தீர்க்கக் குழுக்கள்!

## - நேற்றைய சந்திப்பில் தீர்மானம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான காணிப் பிணக்குகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்து இரு தரப்பினருக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் தரப்புக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

மேற்படி பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு அம்பாறை மாவட்டத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து அவ்வவ் வலயங்களைச் சேர்ந்த ஆறு பிரதிநிதிகளை இருதரப்பினரும் தெரிவுசெய்து பிரதான குழுவின் பிரதிநிதி ஒருவரின் தலைமையின் கீழ் வலயக் கூட்டங்களை இம்மாதம் 19-22 திகதி வரை நடாத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

'மேற்படி சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் தலைமையில் நடைபெற்றது.

# கிளி. திலீபன் மருத்துவமனையில் ஜப்பான் விசேட தூதுவர்




## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

05-05-2003 அன்று கிளிநொச்சியிலிருந்து மாங்குளத்திற்குப் பிரயாணம் செய்யும் போது விநாயமூர்த்தி செந்தூரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.850992886V தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (3191)

### தவறிவிட்டது

து.அபராஜிதன் என்பவரது அ.அட்டை (இல.811333484V) உடையார்கட்டுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஐ.வாமதேவன் உடையார்கட்டு தெற்கு பாடசாலைக்கு முன்பாக எனும் முகவரியில் ஒப்படைக்கவும் (3213)


## இலவச தையல் பயிற்சி

மன்னார் ஆண்டான்குளம் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இலவச தையல் பயிற்சி வழங்கும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இப் பயிற்சி நிலையத்தில் அடம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள், விதவைகள் உள்ளடங்கலாக 30 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். (பா)

# தேசிய பிரச்சினையைத் தீர்க்க முயல்கையில் அரசியல் இலாபம் கருதி எதிரணி செயற்படுகிறது!

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சாடுகிறார்

**இந்நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முயலும் வேளையில் அரசியல் இலாபம், பதவி மோகம் என்பவற்றை குறிப்பாகக் கொண்டு எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுக்கின்றன. எனினும் அபிவிருத்தி அடைந்த மேற்குலக நாடுகளில் என்றால் இவ்விடயத்தில் பொது இணக்கப்பாடு காணப்படுகிறது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.**

தேசிய விஞ்ஞான.பொறியியல் துறை ஊழியர்களின் வருடாந்தக் கூட்டம் ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் மேலும் கூறியதாவது;

இன்று நாடாளுமன்றத்தின் நிலையை நோக்கும் போது நாம் திருப்தி கொள்ள முடியாதுள்ளது.

அன்று என்.எம்.பெரேரா கொல்வின், ஜே.ஆர், பிலிப் குணவர்த்தன போன்றோரின் உரைகளை அவதானித்துள்ளேன். இன்று பாராளுமன்றம் கூடுவதில், அமைச்சரவைக் கூட்டம் என்பவை நடைபெறும். ஒழுங்கு முறைகள் என்பன கேள்விக்குறியாக உள்ளன.

நமது அயல் நாடுகளைப் போலல்லாது எமது நாட்டின் மனித வளம், உலகில் விருத்தி அடைந்த வங்கி,வாணிபம், சட்டம் என்பன நல்ல நிலையில் உள்ளன. தனிநபர் வருமானமும் 870 அமெரிக்க டொலராகும். மேலும் 1931 ஆம் ஆண்டின் சர்வஜன வாக்குமுறையை நோக்கினால் பிரித்தானிய பாராளுமன்றமும் வியக்கும்.

நகரங்களைப் போல கிராம மட்டத்திலும் கைத்தொழில்கள் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வெகுவாக முதலீடு செய்கிறார்கள். எனினும் இந்நாட்டில் யுத்தம் ஒன்று நடைபெறுமாயின் அவர்கள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள்.

கட்டுநாயக்க விமானநிலையம், எண்ணெய்க் கூட்டுத்தாபனம், மத்திய வங்கி சம்பவங்கள் போன்று இனியும் நடக்க யார் விரும்புவர்? புலிகள் தற்காலிகமாகவே பேச்சு வார்த்தையில் விலகியிருக்கிறார்கள் இனி யுத்தம் எதுவும் நடக்கும் சாத்தியம் கிடையாது இவ்வாறு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

# நல்லினக் கால்நடைகளை பெற்றுத்தரக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திடம் நல்லின கால்நடைகளைப் பெற்றுத் தருமாறு கிளைக்குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நல்லினப் பசுமாடுகள் மற்றும் நல்லின ஆடுகள் போன்ற அதிக பயன்பெறக்கூடிய கால்நடைகளைப் பெற்றுத் தருமாறும் வன்னேரி, திருநகர், ஜெயந்திநகர், வட்டக்கச்சி ஆகிய கிளைக்குழுக்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நல்லின கால்நடைகள் அழிவடைந்துள்ள நிலையில் குறைந்த பயன் பெறும் உள்ளூர் இனக் கால்நடைகளை வைத்துக் குறைந்தளவு பயனையே கால்நடை வளர்ப்போர் பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (லோ)

# செம்மலைக் கிராமத்தில் உதயசூரியன் விளையாட்டு விழா

(முல்லைத்தீவு)

செம்மலைக் கிராமத்தின் உதய சூரியன் விளையாட்டு விழா செம்மலை ஜெகன் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர் செ. காசிப்பிள்ளை செம்மலை மாணிக்கப்பிள்ளையார் ஆலயப் பூசகர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

விளையாட்டுக்கழக வீரர்கள் அணிவகுத்து நிற்க தமிழீழத் தேசியக் கொடியினை அளம்பில் பிரதேசப் பொறுப்பாளர் விடுதலை ஏற்றிவைத்தார். கழகக்கொடியினை கழகத் தலைவர் இ.விந்தன் ஏற்றி வைத்தார்.

கொட்டும் மழையிலும் வீரர்கள் சளைக்காது போட்டிகளில் பங்குபற்றினர். பெருமளவான மக்கள் போட்டிகளைப் பார்த்து மகிழ்ந்தனர். (20)


## விரைவில் கிளிநொச்சியில்!

சர்வதேசத் தரத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஆங்கில மொழி பாடநெறிகள் கொழும்பிலும், யாழ். நகரிலும் பிரபல்யம் வாய்ந்த BRITISH BUSINESS SCHOOL வன்னியில் தனது சேவையை விஸ்தரிக்க இருக்கிறது.

## வீடு/கட்டடம் வாடகைக்குத் தேவை

கிளிநொச்சி நகரப்பகுதியிலோ அல்லது சுற்றுப் புறங்களிலோ ஒரு வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை.

## மேலதிக ஆங்கிலமொழி ஆசிரியர்கள் தேவை

முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ ஆங்கில மொழியைக் கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர்கள் தேவை. மேலதிக பயிற்சி யாழ். நகரில் வழங்கப்படும்.

## விரைவில் விண்ணப்பிக்கவும்.

BRITISH BUSINESS SCHOOL
140, TEMPLE ROAD, JAFFNA,
TEL : 021 – 222 – 5796

(3192)

# சமரசப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க பாகிஸ்தான் அறிவித்த சலுகைகள் போதாது!

## இந்திய அரசதரப்பில் தெரிவிப்பு

(புதுடில்லி)

**பாகிஸ்தானுடன் மீண்டும் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க அந்நாடு அறிவித்துள்ள சலுகைகள் போதுமானவையல்ல என்று இந்தியா கூறியுள்ளது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கைவிடுவது பற்றிப் பாகிஸ்தான் தெளிவாக அறிவிக்க வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.**

பாகிஸ்தானுடனான உறவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக அந்நாட்டுடன் பேச்சுக்கள் நடத்தத் தயார் எனத் தெரிவித்த பிரதமர் வாஜ்பாய் இரு நாடுகளுக்குமிடையே தூதரக உறவும், விமானப் போக்குவரத்தும் மீண்டும் தொடங்கும் என்றும் அறிவித்திருந்தார்.

இதையடுத்து இந்தியாவுக்குப் பேருந்து ரயில், விமான சேவைகள் தொடக்கப்படுமென பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடாத்த, இந்த அறிவிப்புக்கள் போதுமானது அல்ல என்று கூறியுள்ளார்கள்.

இந்தியாவின் முக்கிய நிபந்தனையான எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப் படுத்துவது பற்றி பாகிஸ்தான் எதுவும் கூறாததைச் சுட்டிக் காட்டியுள்ள அவர்கள், இது தொடர்பாக பாகிஸ்தான், தெளிவான உறுதிமொழி அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இந்தியாவுடன் விமானப் போக்குவரத்து தொடங்குவதாக அறிவித்துள்ள பாகிஸ்தான், அந்நாட்டின் வான்பகுதியை இந்தியா பயன்படுத்த அனுமதிக்குமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

# லண்டனில் மண்டேலாவுக்கு சிலையமைக்க ஆட்சேபம்!

(லண்டன்)

வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய தென்னாபிரிக்க வீரபுருசரான நெல்சன் மண்டேலாவின் வெண்கலச் சிலையை லண்டன் மத்திய பகுதியில் அமைப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலை நிறுவும் திட்டத்தை மேற்பார்வை செய்யும் கலைஞர்கள் இந்த ஆட்சேபம் பொருத்தமானதல்ல என தெரிவித்து, இது முழுமையாக கலையை வளர்க்கும் நோக்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் என தெரிவித்துள்ளார்கள்.

கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்ட மண்டேலா 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து உலகெங்கும் புகழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



மிசூரிநகரில் அண்மையில் வர்த்தக மையம் அமைந்த பகுதியில் வீசிய புயலில் சிதைந்த பிரதேசம்

# வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு; ஆப்கானில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## - ஐ.நா. அதிகாரி தகவல்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல், மற்றும் வன்முறைகளின் காரணமாக அந்த நாட்டின் பாதுகாப்பிற்கு மிகுந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஆசியாவிற்கான ஐ.நா. அதிகாரி தெரிவித்துள்ளார். அமெரிக்கா, ஆப்கான் மீது நடத்திய தாக்குதலின் பின்னர் ஆப்கானின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் இது நாட்டின் அபிவிருத்தியை வெகுவாகப் பாதித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.வின் உதவித் திட்டங்களும் தலிபான்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



பாக்தாத்தில் பொது இடமொன்றில் சண்டையின் பின் எஞ்சியுள்ள அபாயகரமான பீரங்கிக் குண்டுகள்.



தீவிரவாதிகளால் கொலம்பிய முன்னாள் பிரதமரும் ஆளுநரும் மற்றும் படைவீரர்களும் கொல்லப்பட்ட இடத்தில் காவல் பணியில் ஈடுபடும் கொலம்பிய இராணுவம்

### வேட்டை தொடர்கிறது

சந்தனக்கடத்தல் வீரப்பனை பிடிப்பது தொடர்பாக அதிரடிப் படை அதிகாரிகளுடன் தமிழக டி.ஜி.பி.-கோவிந்த் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதனையடுத்து வீரப்பனைப் பிடிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காக கர்நாடக அதிரடிப்படையும் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளது.



தாய்வானின் தாய்பேய் நகரில் சார்ஸ் நோயை தடுக்கும் மூலிகை என கருதப்படும் தாவரம் ஒன்றை அடுக்கி வைக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்.

# இந்திய தயாரிப்பு 'ராக்கெட்' இன்று விண்ணுக்குப் பயணம்!

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஜி.எஸ்.எல்.டி-2 செயற்கைக் கோள் செலுத்து வாகனத்தை விண்ணில் செலுத்துவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் நேற்று அதிகாலையுடன் முடிவு பெற்றன.

1800 கிலோ எடையுள்ள ஜி-சாட் 2 செயற்கைக் கோளைத் தாங்கிச் செல்லும் இந்தச் செலுத்து வாகனம் இன்று மாலை 5 மணிக்கு, சிறிகரி கோட்டா சதீஸ்கார் விண்வெளி மையத்திலிருந்து செலுத்தப்படுகின்றது. ஏவு தளத்திலிருந்து ராக்கெட் கிளம்பிய 999 விநாடிகளில் அது செயற்கைக் கோளைப் புவி வட்டப்பாதையில் செலுத்தும் என்றும் கூறப்படுகின்றது.

# அதிகாரி பலி!

ஜம்மு-காஷ்மீர் ரஜோரி மாவட்டத்தில் தார்கால் பகுதியில் நேற்று தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் இந்திய இராணுவ மேஜர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் தீவிரவாதிகள் ஒழிந்திருப்பதாக தகவல் கிடைத்தமையினால் சில சிப்பாய்களுடன் மேஜர் அங்கு சென்ற வேளை தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளமையினால் அவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கின் நிர்வாக செயற்பாடுகளுக்கு பொறுப்பாக புதியவர் நியமனம்!

## - சனாதிபதி புஷ் அறிவிப்பு


(வாஷிங்டன்)

ஈராக்கிற்கான பிரதான சிவில் நிர்வாகியாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் யோன் பிறேமர் என்பவரை நியமித்துள்ளார்.

இவர் வெளி விவகார அமைச்சில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்கான தலைவராக பணியாற்றியவர். வெள்ளை மாளிகையில் அவரை தனது அருகில் வைத்துக்கொண்டு சனாதிபதி இந்த நியமனம் பற்றி அறிவித்துள்ளார்.

பிறேமர் அடுத்த வாரம் ஈராக் செல்லவுள்ளார். அந் நாட்டை புனரமைக்கும் நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற தளபதி ஜெய்காணர் என்பவரிடமிருந்து பதவிகளை இவர் பொறுப்பேற்கவுள்ளார்.

ஈராக்கின் விவகாரங்களை கையாள இராணுவத் துறை சாராத அதிகாரிகளை நியமிக்கும் நோக்கம் சனாதிபதி புஷ்சின் இந்த முயற்சியில் தென்படுகின்றது.



அமெரிக்கக் கப்பலான "ஆபிரகாம் லிங்கன்" ஈராக் யோர் முடித்து வாஷிங்டன் துறைமுகத்துக்கு வந்தடைகிறது.



நக்கீரன் பத்திரிகையாசிரியர் கோபால்

# மீள்வாரா... நக்கீரன் கோபால்

நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபாலின் கைது, பொடோ சட்டத்தினுள் மாற்றப்பட்டதையடுத்து, தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் முதல் நடிகர்கள் வரை பெரும் பீதி கொண்டுள்ளனர். அடுத்து யார் கைது? எனும் வினா எல்லோர் மனதிலும் நர்த்தனமாடுகின்றது.

நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் என்ன தகவலை வெளிவிடுவாரோ... அது யாருடைய கைக்கு விலங்கை மாட்டிவிடுமோ... என பரபரப்புடன் அச்சமும் எலலோரிடமும் குடி கொண்டுள்ளது.

அந்த வகையில் நக்கீரன் கோபாலின்

யில் நாகப்பாவோ படுகொலை செய்யப்பட்டார்.

எனவே, உயிர்களின் பெறுமதி தெரியாதவர் தமிழக முதலமைச்சர்"- என நக்கீரன் கோபால் முதலமைச்சருக்கு எதிரான கோஷங்களை அவரது பத்திரிகையில் பிரசுரித்து வந்தார்.

இதனையெல்லாம் கவனத்தில் கொண்ட முதலமைச்சர் ஜெயலலிதா அப்போது எதையுமே பெரிதாக எடுக்காமலும் கண்டும் காணாது இருந்தமை நாகப்பாவின் மரணம் சூடு ஆறிய பின்னர், தன்னை எதிர்த்தவர்களை பொடோவினுள் சிக்க வைக்கவே... எனும் உண்மை இப்போதுதான் புரிகின்றது என்கின்றனர் அரசியல் தலைவர் கள் சிலர்.

உண்மை நிலையும் அதுவாக இருக்கலாம். ஏனெனில் ராஜ்குமார் கடத்தலில் வெளியாக சம்பந்தப்பட்ட அனைவருமே கம்பிகளுக்குப் பின்னேதான் உள்ளார்கள்.

இச்சட்டத்தை ஆதரித்தன "மடியில் தேளை கட்டிக் கொண்டு அது விஷம் கொட்டாது" எனும் செயல்தான் பொடோ சட்ட ஆதரவு என்று எதிர்க்கட்சிகளின் முணுமுணுப்பு இன்று சரியாயிற்று என வை.கோ இந்தச் சட்டத்தை ஆதரித்தமைக்கு கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயகத்தை சிறைக்குள் தள்ளி அதன் குரல்வளையை நெரிக்கும் செயலில் அ.தி.மு.க. அரசு செயற்படுகின்றது. இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேநேரம், முதல்வர் மீதும், காவல் துறையினர் மீதும் எதிரான செய்திகளை, கோஷங்களை கைவிட வேண்டும், நக்கீரன் எனும் பத்திரிகையே வெளிவரக் கூடாது என்றும் காவல்துறையினரால் கோபால் மிரட்டப்படுவதாகவும், இவற்றிற்கு ஒத்துழைக்க மறுப்பின் தீவிரவாதிகள் சண்டை என மர்மமான முறையில் கொலை செய்யப்படலாம் என்றும் எச்சரித்துள்ளதாகக் காவல்துறை வட்டாரங்களின் துழைகள் வழியே கசிந்துள்ளன.

இதனால்தான் போலும், கோபாலின் தந்தை எஸ். இராமநாதன் நக்கீரன் கோபாலுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று சென்னை உயர் நீதி மன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேநேரம், நக்கீரன் கோபாலின் வீடு, பத்திரிகை அலுவலகம் என்பன சோதனைக் குட்படுத்திய போதும், எதுவித தடயங்களும் சிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து காட்டுப்பகுதியில், துப்பாக்கிகள்,தோட்டாக்கள், கூடாரம் அமைப்பதற்கான பொலித்தீன் தாள்கள், என்பன தமிழ் நாட்டு விடுதலைப்படை, தமிழ் நாடு மீட்சிப் படைக்குக் கொடுப்பதற்காக புதைத்து வைத்திருப்பதாக நக்கீரன் கோபால் சாட்சியமளித்ததாக,உளவுத்துறை கடந்த வாரம் பரபரப்பாக செய்தி வெளியிட்டிருந்தது.


ஆனால் இது சித்திரவதையின் காரணமாகவே கூறப்பட்டிருக்கலாம் என்றும்,அல்லது காவல்துறையினரே புதைத்து வைத்துவிட்டு, தோண்டி எடுத்திருக்கலாம் என்றும் சந்தேகங்

டாவது ஆளாக நக்கீரன் கோபாலும் பொடோவில் சிக்க வைக்கப்பட்டுள்ளார்.

எனவே, பொடோ தன்னுள்ளே 42 பேருடன் திருப்திப் பட்டுக்கொள்ளுமா.... அல்லது இன்னும் இன்னும் என நாற்பத்தி இரண்டு, நானூறோ, நானூற்றி இரண்டோ ஆகிவிடுமா.... என கவலையடைபவர்களும் இல்லாமல் இல்லை.

அதேநேரம் எதற்கெடுத்தாலும் பொடோவா.. என வினவப்படுவோரும் இல்லாமலில்லை.

அரசியலில் வெற்றி பெறுவ்தற்குப்



புத்தகம் எழுதியுள்ள தினகர்

பொடோவும் ஒரு தந்திரோபாயமே.... என்று வாதிடுவோரும் இருக்கின்றார்கள். 2004 தேர்தல் முடிய அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் இவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றார்கள்.

2004 தேர்தல் நடைபெறும் வேளை, அ.தி.மு.க மட்டுமே களத்திலிருக்கும் ஏனைய கட்சிகள் எல்லாம் பொடோவின் பிடியில் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எதிர்வு கூறுகின்றார்கள் அவதானிகள்.




தி.மு.க. தலைவர் கருணாநிதி-நடிகர் ரஜனிகாந்த்-முதலமைச்சர் ஜெயலலிதா

சாட்சியப்படி, தி.மு.க. தலைவர் கருணாநிதியும், சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜனி காந்துமே அடுத்த பொடோவின் இலக்கு எனும் சந்தேகங்களும், ஊகங்களும் தற்போது தமிழகத்தை பீடித்துள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி திடுமென நக்கீரன் பத்திரிகை அலுவலகத்தில் கோபால் கைது செய்யப்பட்டார்.

காவல்துறை உளவாளி ராஜமணியை வீரப்பனிடம் காட்டிக் கொடுத்தமை, ராஜமணியின் கொலைக்கு உடந்தை, தமிழகத்தில் தடை செய்யப்பட்ட விடுதலைப் படையின் கையேடு வைத்திருந்தமை, உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தமை, தனித் தமிழ்நாடு உருவாக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டமை... என நக்கீரன் கோபால் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.



ம.தி.மு.க. வை.கோ

இக்குற்றச்சாட்டுக்களில் கைது செய்வதற்கு முன்பாகவே, நக்கீரன் கோபால், தனித் தமிழ்நாடு உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும் நபர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார் என்று உளவுத்துறை வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனவே ஒன்றும் ஒன்றும் இரண்டு எனும் இலகு வழியாக... முந்தைய வழக்கு பதிவையும் தற்போதைய குற்றச்சாட்டுக்களை யும் இணைத்து பொடோவின் கீழ் நக்கீரன் கோபாலின் கைது மாற்றப்பட்டுள்ளது.

"முன்பு கருணாநிதி ஆட்சியில் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்ட போது, அவர் மீட்கப்பட்டார். ஆனால் ஜெயலலிதாவின் ஆட்சி

# பொடோவில் இருந்து...?

மறைமுகமாக செயற்பட்டவர்களை கர்நாடக முன்னாள் டி.ஜி.பி. தினகர் எழுதிய புத்தகம் காட்டிக் கொடுத்திருந்தது.

எனவே, ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு சிக்கலில் மாட்ட வைத்து பொடோவின் பிடிக்குள் தள்ளிவிட்டபடிதான் தமிழக முதலமைச்சர் உள்ளார் என்று அவதானிகளிடையே கசியும் உண்மைகளும் உண்டு.

இதனிடையே நக்கீரன் கோபாலின் கைதையடுத்து, தி.மு.க. தலைவர் பிரதமர், துணைப் பிரதமருக்கு, பொடோ சட்டம் இயற்றப்படும் போது தீவிரவாதிகளை ஒழிப்பதற்காகவே என்றே கொண்டுவரப்பட்டது. ஆனால் தீவிரவாதிகளை பொடோவுக்குள் தள்ளுவதற்குப் பதிலாக தமிழக அரசு, அரசியல்வாதிகளையும், பத்திரிகையாளர்களையுமே கைது செய்வதும், பின்னர் பொடோவுக்குள் இறுக்குவதுமாக உள்ளமை நியாயமான ஒன்றல்ல.

அதனால் இச்சட்டத்தை முற்றாக நீக்கினால் மட்டுமே நன்மையளிக்கும் என்று கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதேபோல், பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோவும், பிரதமர், துணைப் பிரமதருக்கு தந்தி மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

*அ. கலைவாணி*

பத்திரிகை ஆசிரியர் கோபாலை கைது செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனே தடுத்து நிறுத்த வேண்டும். பொடோ சட்டம் ஜனநாயக விரோதமாகப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையுடன்,

பொடோ சட்ட மசோதா கொண்டுவரப்பட்ட போது எதிர்க்கட்சிகள் அனைத்துமே பயந்தன. தீவிரவாதிகளுக்கு எதிராக பாயும் எனும் இச்சட்டம் மாறாக எல்லோர் மீதும் பாயும் அபாயமும் உண்டு. எனவே இச்சட்டத்தை ரத்துச் செய்யுங்கள் என்றன.

ஆனால். தி.மு.க., ம.தி.மு.க. என்பன

கள் எழுந்துள்ளன.

ஏனெனில் நக்கீரன் கோபாலைச் சிறையில் பார்க்க யாருக்குமே அனுமதி இல்லை என்பதும் ஒரு சந்தேகப் புயலை எழுப்பியுள்ளது.

அது மட்டுமன்றி பொடோ நீதிமன்றத்தில் தனக்குப் பாது காப்பு அளிக்க வேண்டும் என நக்கீரன் கோபால் கேட்டுக்கொண்ட போது, நீதிமன்றமே சலனப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதேநேரம், சித்திரவதை தாங்க மாட்டாது நக்கீரன் கோபால் தம்மை நோக்கிக் கையை நீட்டி விட்டால்... எனப் பலர் பீதியுடன் உலாவுவதாகவும் கூறப்படுகின்றது.

மறுபுறம் நக்கீரன் கோபாலை பகடைக் காயாகக் கொண்டே ஏனையவர்களை (நடிகர் ரஜனிகாந், தி.மு.க. தலைவர் கருணாநிதி) உள்ளே தள்ளும் முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் எதிர்பார்ப்புக்கள் நிலவ ஆரம்பித்துள்ளன.

இதனை எதிர்பார்த்த நடிகர் ரஜனிகாந் எல்லாவற்றுக்கும் தயாராக வக்கீலுடன் கலந்தாலோசித்து விட்டதாகவும், தற்போது தனது அடுத்த படத்தில் கவனம் செலுத்துவதாகவும் கூறப்படுவதால்,அடுத்து தமிழகத்தில் என்னதான் நடக்கப்போகிறதோ எனப் பலரும் கலக்கமடைந்துள்ளனர்.

தற்போது பொடோ சட்டம் இயற்றப்பட்ட காலம் முதல் 41 பேர் தமிழகத்தில் பொடோவின் பிடியில் உள்ளார்கள். நாற்பத்தி இரண்

பொடோவில் மாற்றம் கொண்டு வருவதாகக் கூறும் துணைப்பிரத்மரோ, தற்போது வாய்மூடி மௌனமாக இருப்பது ஏன்... என்றும் வினா எழுப்பப்படுகின்றது.


பொடோ சட்டம் நீக்கப்படாத வரை சுதந்திரம் என்பது விந்தைக்குரிய, கேலிக்குரிய, ஒன்றாக மாறிவிடும் சாத்தியங்களும் அதிகம் தான்




எனவே, நக்கீரன் கோபாலின் பொடோ கைது, யாருடைய தலைவிதியை மாற்றப் போகிறதோ... யாருடைய கைக்கு விலங்கை மாட்டி, பொடோவுக்குள் தள்ளிவிடப் போகின்றதோ என்பதே தற்போதைய, பலருக்கும் கவலை தரும் எதிர்பார்ப்புக்கள் ஆகும்.

மறுபுறம் சூடுபிடித்திருக்கும் பொடோ சட்ட விவகாரம் மாறுமா... மாற்றத்தை ஏற்படுத்துமா... அல்லது தமிழகத்தை சிறைக் கூடமாக்கிடுமா.... என்பதே எதிர்கால எதிர்பார்ப்புக்கள் ஆகும்.





# தலைவர் பிரபாகரன் - யசுகி அகாஷி சந்திப்பு













# கோட்டைப்பகுதியில் முகாம் அமைப்பதை எதிர்த்து கூட்டுறவுச்சங்க சமாசம் பிரதமருக்கு மகஜர்

**யாழ். கோட்டையில் புதிய இராணுவமுகாம் அமைக்கப்படுவதற்கு யாழ். மாவட்டவிவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இதன் இயக்குனர் சபை இதற்கெதிராகத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதுடன் அதனை சிறிலங்காப் பிரதமருக்கும் மற்றும் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.**

அதன் விபரம் வருமாறு;

மக்களது நலனோம்பும் கூட்டுறவுத் துறையினராகிய நாம், பின்வரும் காரணங்களுக்காக யாழ். கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் சிறிலங்கா அரசாங்கத்தினது முடிவையும், தொடர்செயற்பாடுகளையும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமெனக் கோருகின்றோம்.

1. இயல்பு வாழ்நிலை என்பது மக்கள் எதுவித அச்சமுமின்றி, இடரின்றி சுமுகமாக அன்றாட செயற்பாடுகளை மனநிறைவுடன் மேற்கொள்வதற்கான சூழ் நிலையைக் குறிக்கும். யாழ். மாநகரசபையின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதிக்கு இராணுவ முகாமை மாற்றுவதானது மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை எவ்வகையிலும் நீக்குவதாகாது.

2. புதிதாக அமைக்கப்படுகின்ற இராணுவமுகாமுக்கு அருகில் அனைத்துத் தீவுப்பகுதிகளுக்குமான ஒரேயொரு தரைவழிப்பாதை அமைந்துள்ளது. புதிய இராணுவமுகாம் அமைக்கப்படுதல் தீவுப்பகுதி மக்களது சுதந்திரமான போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாகும்.

3. இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்பும் என்ற நோக்கில் புனரமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினது உச்ச மையமாக விளங்குகின்ற 'மாவட்ட கூட்டுறவுச்சபை வளாகத்தில், மாவட்டக் கூட்டுறவுச்சபை அலுவலகம், இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத் தாபனம், இறைவரித்திணைக் களம், தொழில்திணைக்களம் என்பன அமைந்துள்ளன. இந்த வளாகத்தை நோக்கி தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள வருகின்றார்கள். இவ்வாறான சூழலில் இராணுவம் நிலைகொள்வது மக்களுக்குப் பெரும் இடையூறாக அமையும்

4. இதேபோன்று இப்பகுதிகளில் தபால்த்திணைக்களம், யாழ். பலநோக்குக்கூட்றவுச்சங்க தலைமைஅலுவலகம், ரெலிக்கொம்லிமிட்டட் அலுவலகம், விலைமதிப்பீட்டுத்திணைக்களம் என்பன இயங்கி வருகின்றன. இவற்றின் சுமுகமான இயங்குதலுக்கு இடர்கள் ஏற்படும்.

5. புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையில் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கூடித் தங்கள் தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள். இப்பகுதியில் இராணுவத்தினர் நிலைகொள்ளுவது இவ் வகைச் செயற்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும்.

6. தென்னாசியாவில் முதன்மை பெற்றதும் தமிழ்மக்களது பண்பாட்டு மையமாகக் கடந்த காலத்தில் விளங்கி, பின்னர் எரியூட்டப்பட்டு, அழிக்கப்பட்டு மீண்டும் புனரமைக்கப்படுகின்ற யாழ். மாநகரசபை பொதுநூலகத்திற்கு மிக அண்மித்து இப்புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள், மாணவர்கள், பொதுமக்கள், கல்விமான்களுக்கு அமைதியான கல்வித்தேடலுக்கு இது இடையூறாக இருக்கும்.

7. விவசாயம், சிறுகைத்தொழில், கடல் உணவுகளை சந்தைப்படுத்தும் வாய்ப்பு யாழ். நகரப்பகுதியிலேயே உள்ளது. எனவே யாழ்.நகரை நோக்கி வரும் மக்களுக்கு புதிதாக அமைக்கப்படும் இராணுவமுகாம் பெருமிடரை அச்சத்தை ஏற்படுத்திவிடுமாகையால் மக்களது நாளாந்த சந்தைப்படுத்தும் வாய்ப்பு முற்றாக தடுக்கப்பட்டுவிடும்.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட சிறிலங்கா இராணுவ முகாம் புரிந்துணர்வு நடவடிக்கையை மீறுகின்ற செயலாகும்.

இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியேற வேண்டும் என்ற நல்நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு நடவடிக்கையானது, நம்பிக்கையை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க வேண்டுமாயின், சிறிலங்கா அரசு கோட்டைப்பகுதி உட்பட, எங்குமே புதிய இராணுவ முகாமை அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

## மரியன்னை சொரூபம் எடுத்து வருகை

(மட்டக்களப்பு)

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பிரகடனப்படுத்தியுள்ள உலக செபமாலை ஆண்டை முன்னிட்டு போர்த்துக்கல் நாட்டிலிருந்து மரியன்னையின் திருச்சொரூபம் மட்டக்களப்பிற்கு எடுத்து வரப்படவுள்ளது.

வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தாண்டவன் வெளி வியாகுல மாதா ஆலயத்தில் பங்குத்தந்தை யோசப் தலைமையில் வழிபாடு இடம்பெறவுள்ளது. பிற்பகல் 6.00 மணிக்கு தாண்டவன் வெளியிலிருந்து திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் படவுள்ளது. தொடர்ந்து புளியந்தீவு புனித மரியன்னை இணைபேரால யத்தில் பிற்பகல் 6.00 மணிக்கு செப வழிபாடும், திருப்பலியும் மறை மாவட்ட ஆயர் கலாநிதி யோசப் தலைமையில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அலிகம்ப மீளக்குடியேற்ற வாசிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொருளுதவி

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அலிகம்ப மீளக் குடியேற்ற வாசிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கடந்த இரண்டாம் திகதி உடுதுணிகள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

அலிகம்ப கிராம வாசிகள் 1990 ஆம் ஆண்டு முற்றாகத் தங்கள் இல்லிடங்கள் அழிந்து உயிர்களைப் பறிகொடுத்து இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து திருக்கோவில் அகதி முகாம்களில் வாழ்ந்தனர்.

இக்கிராம வாசிகள் 13 ஆண்டுகள் தங்களின் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உணவு, உடை, கல்வி, சுகாதாரம் அற்று ஒரு தசாப்த காலம் அகதி முகாமிலே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர்

சமாதானச் சூழல் உருவாகியதையடுத்து தங்களின் சொந்த இடங்களுக்குச் சென்ற கிராம வாசிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் முகமாக முதற்கட்ட நடவடிக்கையாக திருக்கோவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பெற்ற உடுப்பு வகைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.



திருக்கோவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அலிகம்ப குடியேற்ற வாசிகளுக்கு உடுதுணிகளை அன்பளிப்புச் செய்ய விபரம் எடுப்பதைப் படத்தில் காணலாம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி சிற்றுண்டிச் சாலை நடாத்துவதற்கான**

**ஏலம் கோரல்**

எமது கல்லூரியில் இயங்கி வரும் சிற்றுண்டிச்சாலையை 01.06.2003 முதல் 3வருடத்திற்கு நடாத்த விரும்புவோர் மாதமொன்றுக்குச் செலுத்தக் கூடிய கட்டணத்தொகையை சொந்த முகவரி விபரங்களுடன் குறிப்பிட்டு 20.05.2003 க்கு முன் அதிபர் மு/மல்லாவி மத்திய கல்லூரி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
மு/மல்லாவி மத்திய கல்லூரி.

(2924)

## தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகளை மருத்துவ சோதனைக்கு உள்ளாக்கப் பணிப்பு!

தமிழகத்திலிருந்து படகுகள் மூலம் நாடு திரும்பும் தமிழ் அகதிகள் மூலம் ஆபத்தான தொற்று நோய்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதாரப் பகுதி அதிகாரிகள் எச்சரித்துள்ளார்கள்.

இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகளில் தலைமன்னார் பேசாலைப் பகுதிகளுக்குத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை மனிதாபிமான அடிப்படையில் அவர்களின் சொந்த இடங்களுக்கு அதிகாரிகள் அனுப்பி வைக்கின்றார்கள்.

ஆனால், அவர்களைப் பற்றி மருத்துவ சோதனைகள் எதுவுமே மேற்கொள்ளாமல் விடுவதனால் பல்வேறு கொடிய நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.எனவே நாடு திரும்பும் அகதிகளை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை அளிக்குமாறும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

**தமிழீழப் போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கான**

**விண்ணப்பம் கோரல்**

**பின்வரும் தகைமைகள் உடைய ஆண்பாலோர் மேற்படிப்பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.**

**தகைமைகள்:**

அ. கல்வித் தகைமை:- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்
ஆ. அகவை:- 23 தொடக்கம் 35 வரை
இ. உயரம் :- 05 அடி 3அங்குலம்

**குறிப்பு:**

அ. விண்ணப்ப முடிவு நாள் :- 20.05.2003
ஆ. அடிப்படை மாத ஊதியம் 4510+1000
--------------------- =5510.00
05x100+05x110
இ. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு 30.05.2003, 31.05.2003 ஆகிய இரு நாட்கள் தமிழீழப் போக்குவரவுக் கழகம் புதுக்குடியிருப்புப் பணிமனையில் நடைபெறும்.
ஈ. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வி, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
உ. விண்ணப்பப்படிவங்களை **புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, முழங்காவில், முகமாலை** ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுகைப்பகுதி,**
**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**நடுவப்பணிமனை, விசுவமடு.**

(சி-8107)



## சிந்தனைக்கு

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-05-2003

# ஒரு தலைப்பட்சமாக...!

இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியான லெப். ஜெனரல் சதீஸ் நம்பியாரைத் தொடர்ந்து இந்தியாவின் முன்னாள் பிரந்தியக் கடற்படைத்தளபதிகளில் ஒருவரான வைஸ். அட்மிரல் பி.கே. ஜேக்கப்பும் சிறிலங்கா படையினருக்கு ஆலோசனை வழங்குதற்கென வரவழைக்கப்பட்டுள்ளார். அதாவது தரையில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பிற்கு ஆலோசனை வழங்க சதீஸ் நம்பியார் அழைக்கப்பட்டுள்ளார் எனின்– கடலில் பாதுகாப்பை உறுதி செய்ய பி.கே. ஜேக்கப் அழைக்கப்பட்டுள்ளார் எனலாம்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சிக்கல் எழுந்த போது, இராணுவத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்தை எவ்வாறு மீள் ஒழுங்கமைப்பது என்பதற்கான ஆலோசனைக்கென லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் நான்கு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் நேற்று முன்தினம் தனது அறிக்கையுடன் அவர் கொழும்பிற்கு வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சதீஸ் நம்பியாரின் இறுதி அறிக்கையில் எத்தகைய சிபார்சுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தகவல்கள் எதுவும் வெளிவராத போதும் – ஆரம்பத்தில் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கையில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் பெரும் மாற்றம் எதனையும் செய்யத்தக்க சிபார்சுகளை – அதாவது மக்களின் தமது சொந்த இடங்களில் முழு அளவிலான மீள் குடியேற்றத்திற்கு ஏற்ற வகையில் அவரின் சிபார்சுகள் இருக்கும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆயினும், சதீஸ் நம்பியாரின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வெளிவந்த பின்னரே இது தொடர்பாகக் கருத்துக்கள் கூறுவது பொருத்தப்பாடானதாக இருக்கும்.

ஆனால், சிபார்சுகள் எத்தகையதாக இருப்பினும் கூட, உயர் பாதுகாப்பு வலயத்தில் தமிழ் மக்கள் மீளக் குடியேற வகை செய்யாத எந்தவொரு ஆலோசனையும் பிரச்சினைத் தீர்விற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை. அத்தோடு சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகளை விடுதலைப்புலிகளோ அன்றி தமிழ் மக்களோ ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை. ஏனெனில் சதீஸ் நம்பியாரின் அழைப்பானது அரசின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையே ஆகும்.

இதேபோன்றே, தற்பொழுது முன்னாள் கடற்படைத்தளபதி பி.கே. ஜேக்கப்பின் அழைப்பும் உள்ளது. அதாவது கடற்பகுதியில் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதற்கு பி.கே. ஜேக்கப்பின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ஆனால், அரசின் இந்நடவடிக்கையானது ஒரு தலைப்பட்சமானது மட்டுமல்ல, தற்போதைய அரசியற் சூழ்நிலைக்கும் மாறுபாடானதொன்றாகும்.

சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கை சில யுத்த நிறுத்த உடன்பாட்டையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் அமைந்திருந்தன என்பதை அண்மைய நிகழ்வுகளே வெளிப்படுத்தப் போதுமானதாகும். இந்நிலையில் கடற்பிராந்தியத்தில் யுத்த நிறுத்தத்தை உறுதியான முறையில் கைக்கொள்ளுதல் அவசியம் என்ற நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்வைத்துள்ள யோசனைகள் இரு தரப்பினதும் – சிறிலங்கா அரசு– விடுதலைப்புலிகள் – பரிசீலிக்கப்பட்டு ஆட்சேபங்களும், திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டும் உள்ளன. அதாவது, கண்காணிப்புக்குழுவின் ஆலோசனைகள் முழு அளவில் ஏற்றுக் கொள்ளப்படாது போனாலும், திருத்தங்கள், ஆலோசனைகள் என்ற ரீதியில் இன்னமும் நிராகரிக்கப்படாமல் பேச்சுவார்த்தை மேசையில் உள்ளது.

இந்நிலையில், கடலில் யுத்த நிறுத்தம் தொடர்பான ஆலோசனை வழங்குவதற்கென சிறிலங்கா அரசு இந்திய முன்னாள் பிராந்திய கடற்படைத்தளபதி வைஸ். அட்மிரல் பி.கே. ஜேக்கப்பை அழைத்துள்ளமையானது தவிர்க்க முடியாது சில கேள்விகளை எழுப்புவதாகவே உள்ளது. இதில் முக்கியமானது தற்பொழுது யுத்த நிறுத்த கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள நோர்வே தலைமையிலான குழுவின் மீது சிறிலங்கா அரசு – குறிப்பாக ஐ.தே. முன்னணி அரசாங்கம் நம்பிக்கை இழந்துவிட்டதா? என்பது. ஏனெனில், பி.கே. ஜேக்கப்பின் அழைப்பானது கடலில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பிற்கென கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ள யோசனைகளை அரசு நிராகரிப்பதாகவே அர்த்தம் கொள்ள வைக்கக் கூடியதாகும்.

அதுமாத்திரமல்ல, கடலில் யுத்த் நிறுத்தம் விரைவில் உறுதி செய்யப்படுவதை அரசாங்கத் தரப்பு விரும்பவில்லையோ என்ற சந்தேகத்தையும் தோற்றுவிக்கத் தக்கதாவுமுள்ளது. அதாவது ஜேக்கப்பினால் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் விடுதலைப்புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய அவசியமோ தேவையோ இல்லாத பட்சத்தில், அதனைச் சாட்டாகக் கொண்டு கடலில் ஓர் அமைதியற்ற சூழ்நிலையை அரசாங்கம் தொடரவிரும்புவதாகவே சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும். இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்பதற்கு அப்பால் ஆலோசனை என்ற ரீதியில் கண்காணிப்புக்குழுவிற்குப் புறம்பான வகையில் நிபுணர்களையோ. வேறு சக்திகளையோ அரசாங்கம் இணைத்துக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்திற்கு உதவப் போவதில்லை. அரசாங்கத்தரப்பு ஆலோசனைகளைப் பெறுவதற்குத் தமக்கு உரிமையுண்டு என்றோ அன்றி ஆலோசனைகள் பெறுவது ஆரோக்கியமானது என்றோ கூறிக்கொள்ளலாம். தம்மை நியாயப்படுத்தவும் முனையலாம். ஆனால், அரசாங்கம் ஆலோசனைக்கு ஒரு தலைப்பட்சமாக நிபுணர்களை அழைக்கின்றமையும் இரு தரப்பினரின் அங்கீகாரத்தையோ அன்றி மதிப்பையோ பெற்றவர்களை அழைக்கவில்லை என்பதும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்திற்கு உதவுவதாக இருக்கமாட்டாது.

# சர்வதேச அரசியலில் இடம்பெறும் விடயங்கள் மோசமான விளைவை ஏற்படுத்துவதாகவுள்ளன

### –சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கவலை

சர்வதேச சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடிய விடயங்கள் கண்டறியப்பட்டு ஐக்கிய நாடுகள் சபை மூலம் அவற்றிற்குத் தீர்வுகாண வேண்டுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரமும் தனித்துவமும் உறுதி செய்யப்பட வேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

அண்மைக் காலமாக சர்வதேச அரசியலில் இடம்பெற்றுவருகின்ற விடயங்கள் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

மாலைதீவு சனாதிபதிக்கு உத்தியோகபூர்வ விருந்துபசாரம் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சார்க் அமைப்பின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் வெற்றி கரமாக முன்னெடுப்பதற்கு சிறிலங்கா மாலைதீவுடன் இணைந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என அவர் மேலும் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு சிறிலங்கா வழங்கி வரும் ஆதரவு தொடரும் எனவும் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையேயான உறவுகள் வலுப்பெற்று வருவதுடன் இரண்டு நாடுகளும் ஒன்றை ஒன்று தொடர்ந்து பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஈ.பி.டி.பி.யினருக்குப் பாதுகாப்பு வழங்க சனாதிபதி அவசர பணிப்புரை!

### அரசு மீது கடும் விசனம்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா சனாதிபதி முப்படைத் தளபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி.யினர் புலிகளால் கொலை செய்யப்பட்டுவருவதாகவும், 16 நாட்களில் இரண்டு பிரதேச சபைத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொலைகளுக்குக் காரணமானவர்களை கைது செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் வெளியிட்ட அறிக்கையிலே கூறியுள்ளார்.

ஈ.பி.டி.பி.யினரின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டிருந்த ஆயுதங்கள் ஆளும அரசினால் மீளப்பெற்றமைக்கு அவ்வறிக்கையில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

# கிளி.மாவட்டத்தில் தாய்மார், குழந்தைகளுக்கு இம்மாதம் தொடக்கம் சத்துணவு!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கற்பவதிகளுக்கும் பால் ஊட்டும் தாய்மாருக்கும் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் குறைநிரப்பு உணவு இம்மாதம் முதல் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறைநிரப்பு உணவான சோயா, சோளம் என்பன அடங்கிய சத்துணவு இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிளி.அரச செயலகம். கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பவற்றால் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

போசாக்கு ரீதியாகப் பாதிக்கப்படும் நிலையை நீக்கி ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

# மகளிர் உலகக் கிண்ணப் போட்டிகள் சார்ஸ் அச்சுறுத்தலால் மாற்றம்!

மகளிருக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் சார்ஸ் நோயின் அச்சுறுத்தல் காரணமாக சீனாவிலிருந்து வேறு நாடொன்றுக்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

23ஆம் திகதி சீனாவில் செப்டெம்பர் முதல் இப் போட்டிகள் நடைபெறவிருந்தது மகளிருக்கான உலகக்கிண்ண கால்பந்துப் போட்டிவேறு நாட்டுக்கு மாற்றப்படும் என சர்வதேச கால்பந்து சம்மேளனம் தற்போது அறிவித்துள்ளது.




சூரிச்சில் நடைபெற்ற கால்பந்து சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டத்தில் மருத்துவக்குழு அளித்த ஆலோசனையின் அடிப்படையில் இம்முடிவு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச கால்பந்து சம்மோளனம் (.:பீபா) தெரிவித்துள்ளது.

மாற்றப்படும்போட்டி அவுஸ்திரேலியாவில் அல்லது அமெரிக்காவில் நடைபெறலாம் எனத் தெரிகின்றது 16 அணிகள் இப்போட்டிகளில் பங்கு பற்றவுள்ளன.



மெக்ஸிகோவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மெக்ஸிகோ வீரர் அடிக்கும் பந்தைத் தடுக்க முயலும் கொலம் பிய வீரர்

# சமநிலையில் முடிவு

சிறிலங்கா -நியூசிலாந்து அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டிவெற்றி தோல்வியின்றி முடிவு..ற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 305 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களையும் பெற்றது.

சிறிலங்கா அணிஅதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 298 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 72 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது.

# அதிக தடவை 5 விக். கைப்பற்றி முரளிதரன் சாதனை

சிறிலங்காவின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 450 விக்கெட்டுக்கள் என்ற மைல் கல்லை எட்டினார்.

நேற்று நியூசிலாந்து அணியுடன் அஸ்கிரிய அரங்கில் நிறைவு பெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் ரொப்பியின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் இவ் இலக்கை முரளி எட்டினார்.

80 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள முரளி மேற்படி போட்டியில் 37வது தடவையாக இனிங்ஸ் ஒன்றில் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றி நியூசிலாந்து வீரர் ரிச்சர்ட் ஹட்லியின் சாதனையை முறியடித்தார்.

# தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தாது இராணுவ முகாம்கள் இடம் மாற்றப்படும்

## சிறிலங்காப்பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன

பொதுமக்களுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கும் இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றப் போவதாகவும், வடக்கு கிழக்கில் இவ்வாறான 152 பிரிவுகளை 88 இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்போவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்தார்.

தேசிய பாதுகாபபிற்கு அச்சுறுத்தல் ஏற்படாதவிதத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாதுகாப்பு வலயத்தின் விஸ்தீரணமும் குறைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் அதியுயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு எவரும் கோரிக்கை விடுக்கவில்லை. அதியுயர் பாதுகாப்பு வலயங்களை குறைக்குமாறே கேட்கப்பட்டுள்ளது.

பரப்பளவைக் குறைத்து அந்த இடங்களில் முன்னர் குடியிருந்த மக்களை மீளவும் குடியமரக் கூடிய வாய்ப்பை வழங்குமாறுதான் அவர்கள் எம்மிடம் கேட்டுள்ளனர். நாங்கள இதனைப்பரிசீலித்து வருகிறோம்.

விடுதலைப் புலிகளின் படைப் பிரிவுகளை ராணுவமாகவோ அல்லது கடற்படையாகவோ அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. விடுதலைப் புலிகளிடம் ஆயுதம் பொருத்தப்பட்ட படகுகள் இருக்கின்றன. ஆயுதம் தாங்கிய போராளிகள் இருக்கின்றனர். அப்படி எதுவும் இல்லை என்று கூறினால் நாங்கள் முட்டாள்கள்.

ஆனால் இவர்களை கடற்படையாவோ இராணுவமாகவோ நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஆனால் அவர்களிடம் இவ்வாறான படைப்பிரிவுகள் இருக்கின்றன என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திலக்மாரப்பன மேலும் தெரிவித்தார்.

---

### யாழ்.....

தொடர்பாகவும் வவுனியா அரச அதிபருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் போரூட் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் பிரசன்னமாகியிருந்தார்.

நேற்று மாலை மன்னார் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகவும் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் ஆராய்வதற்காக மன்னார் மாவட்டத்திற்கு சென்றார். (10)

---

# நம்பியாரின் அறிக்கை இன்று ரணிலிடம் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் வகையிலேயே அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான தனது அறிக்கை தயார் செய்யப்பட்டிருப்பதாக உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற இந்திய முன்னாள் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக சதீஸ் நம்பியாரின் அறிக்கை இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நேற்று சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா ஆயுதப்படை தொடர்பான எனது கருத்துக்களும் யோசனைகளும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் நடக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும். இதனை ஆழமாகப் புரிந்துகொண்டு செயற்பட நான் முயன்றிருக்கின்றேன். சமாதான முயற்சிகளுக்கான பல்வேறு விடயங்கள் தொடர்பாக என்னால் கருத்துக்கூற முடியாது. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து நான் முதற் கவனம் செலுத்தியுள்ளேன். இது தொடர்பான யோசனை மாத்திரமே என்னிடம் கேட்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

---

-சமாதான முயற்சிகள் குறித்து ஆராய-

# நேபாள உயர்மட்டக்குழு கொழும்பு வந்துள்ளது!

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நேபாள உயர்மட்ட பிரதிநிதிகள் 17பேர் அடங்கியகுழு கொழும்பு வந்துள்ளது.

நேபாள அரசியற் பிரமுகர்களும் மாவோ கிளர்ச்சிக் குழுவின் தலைவர் ஒருவரும் இந்தக்குழுவில் அடங்குகின்றனர். நேபாள காங்கிரசைச் சேர்ந்த சக்ரபிரசாத் பன்ஸ்ரெலா, நேபாள சனநாயக காங்கிரசின் பிரலேந்திர நித்தி, மாவோ கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த தேவ் குருங் நேபாள சத்பாவன கட்சியைச் சேர்ந்த ஹிருத பேஷ் திருப்பாதி மற்றும் சிட்டாகிரி ஆகியோர் இக்குழுவில் முக்கிய பிரநிதிகளாக வுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் ஏற்பாட்டின் பேரில் இலங்கை வந்துள்ள நேபாளக்குழுவினர் இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடும் முக்கிய அரச பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

---

### புலிகள்....

கருத்துத் தெரிவித்த அகாஷி மேலும் தெரிவிக்கையில் :

பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது குறித்தும் பிரதமருடன் பேசவுள்ளேன்.

டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வார்கள் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. ஆனால், மாநாடு திட்டமிட்டபடியே நடக்கும்.

டோக்கியோ மாநாட்டை வேறு திகதிக்கு மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை ஜப்பானிய அரசு போன்று ஒரு பெரிய அரசு அவ்வளவு சுலபமாக மாற்றங்களைச் செய்யமுடியாது. அது ஓர் பெரிய கப்பலைப் போன்றது. போகும் பாதையில் சுலபமாகத் திருபப மாற்ற முடியாது என்றார்.

---

# பிரதமரின் பாராளுமன்ற உரை திருப்தி தருவதாக இல்லை!

## - ஜே.வி.பி. கூறுகின்றது

(கொழும்பு)

சமாதான முயற்சி தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் நேற்று முன்தினம் ஆற்றிய உரை திருப்தியளிக்கவில்லை. என ஜே.வி.பி. கூறியுள்ளது.

இது இவ்வாறிருக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரை மீதான விவாதம் இன்று நடைபெற விருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சியின் தற்போதைய நிலைகுறித்து நேற்று முன்தினம் பிரதமர் பாராளுமன்றில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார். இது தொடர்பான விவாதத்தினை இன்று நடத்துவது என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

### விசேட தூதுவர்....

சோ.தங்கன் அவர்கள் வரவேற்று அழைத்துச் சென்றார்.

அரசியல் துறையினரின் மாநாட்டு மண்டபத்தில் பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற சந்திப்பில் புலிகள் தரப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தலைமையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திருமதி அடேல் பாலசிங்கம் பொருளாதார ஆலோசகர் ஜோஜ் மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுக்களில் கலந்துகொண்ட ஜப்பானியக்குழுவினர் தமிழீழக் காவல்துறையின் பாதுகாப்புடன் கிளிநொச்சியில் உள்ள மருத்துவமனையையும், தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினையும் பார்வையிட்டு பிற்பகல் 3.30 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் கொழும்பு புறப்பட்டனர். (பா)

---

# இடிந்த ஓலைக் கட்டடத்தில் கிளி. தொழில் திணைக்களம்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் திணைக்களம் அடிப்படை வசதிகள் இன்றி இடிந்த ஓலைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது.

இக்கட்டடத்தின் கூரை கறையான் அரித்த நிலையில் பெரும் சேதமடைந்துள்ளது. அத்துடன் அண்மையில் பெய்த மழை காரணமாகப் பெரும் ஒழுக்குகள் ஏற்பட்டு கட்டடச் சுவர்கள் யாவும் அரிக்கப்பட்டு மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையிலேயே இத்தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் மழை மற்றும் கறையான் போன்றவற்றின் தாக்கங்களால் சேதமடையும் அபாயநிலையில் உள்ளது. (லோ)

---

### தமிழ் மக்கள்....

குறிப்பாக தமிழ் மக்கள் நீண்டகாலமாக - கடந்த ஐம்பது ஆண்டு காலமாக - தொடர்ச்சியாக பல பேச்சுவார்த்தைகளை நடாத்தி இருக்கின்றார்கள். பல பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியிருக்கின்றார்கள். ஆனால் எந்த ஒரு அரசாங்கமும் உருப்படியாக எங்களுடைய மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்ற நீண்ட வரலாற்றைக் கூறி மீண்டும் நாங்கள் இன்றைய அரசாங்கத்தால் ஏமாறத் தயாராக இல்லை. இந்த அரசாங்கம் உருப்படியான தீர்வை மக்களுக்கு முன்வைக்க வேண்டும். அதை விடுத்து பேச்சுக்களைத் தொடர்வதாலும் தீர்மானங்களை நிறைவேற்றுவதாலும் அர்த்தமில்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அதாவதுஎடுக்கப்பட்டமுடிவுகள் தொடர்பாக அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையை ஒத்தி வைத்திருக்கின்றோம் என்பதை எடுத்து விளக்கி அரசாங்கத்திற்கு ஒரு கால இடைவெளியைக் கொடுத்துள்ளோம். இந்த கால இடைவெளிக்குள் உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து எமது மக்களின் அவசர அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என தேசியத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக இடம்பெயர்ந்த பல இலட்சக்கணக்கான மக்கள் தமது வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் செல்ல முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள். இந்த மக்கள் தமது வீடுகளுக்கும் தமது கிராமங்களுக்கும் திரும்பிச் செல்வதற்கு எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை என ஜப்பானிய பிரதிநிதிகளுக்குத் தலைவர் அவர்கள் எடுத்து விளக்கினார்.

அதேவேளையில், எமது மக்களினுடைய பிரச்சினைகள் மனிதாபிமான அடிப்படையிலான பிரச்சினைகள் இதைவிடுத்து அரசாங்கமும் அரசாங்கத் துருப்புக்களும் தங்களுடைய சொந்தப் பாதுகாப்பு, தற்பாதுகாப்பு என்ற ரீதியிலே தான் இந்தப் பிரச்சினையை அணுகுகின்றனரே தவிர எந்த ஒரு வகையான தீர்வும் எட்டப்படவில்லை.

எங்களுடைய நாட்டில் உள்ள பிரச்சினையை வெளிநாடுகளில் கொண்டுபோய் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளிடம் கொடுத்து அவர்களிடம் இருந்து சில சிபார்சுகளை எதிர்பார்த்து இந்த அரசாங்கம் நிற்கின்றது. இது இந்த அரசாங்கத்தின் பலவீனத்தைத்தான் காட்டுகின்றது. ஏனென்றால் அரசாங்கம் எங்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத் தவறி வெளிநாடுகளின் - அந்நிய நாடுகளின் - உதவியை நாடிநிற்கின்றது. இது மிகவும் வருந்தக் கூடிய விடயம் என்று தலைவர் அவர்கள் எடுத்து விளக்கினார்.

இங்கு "சிரான்" எனும் குழு இருக்கின்றது. அந்தக் குழு இன்னமும் உருப்படியாகச் செயற்படவில்லை. இதற்கு என்று ஒரு நிதியம் உருவாக்கப்பட்டது. வடகிழக்கு புனர்வாழ்வு நிதியம் என்ற இந்த நிதியத்திற்கே அரசாங்கம் இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை. இதற்கு நிதி வழங்குவதில் சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றது என்று அதனையும் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இவ்வாறு ஒரு பிரச்சினையும் தீராமல் குறிப்பாக எந்த ஒரு முக்கியமான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்காமல் அரசாங்கம் இழுத்தடித்துக் கொண்டு போகின்றதே தவிர எங்களுடைய மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லை.

அரசாங்கம் ஏன் இவ்வளவு தூரம் அவசரப்படுகின்றது என்றால் அவர்களுக்குத் தேவை பொருளாதார உதவி. உலக நாடுகளில் இந்த சமாதானத்சைமாதானச் சூழ்நிலையை-ஒரு பிரச்சாரமாகக் காண்பித்து புலிகளுடன் சேர்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாக ஒருமாயையைத் தோற்றுவித்து உலக நாடுகளிடமிருந்து உதவியைப் பெற்று தென்னிலங்கையை வளர்ப்பதற்கு அரசாங்ம் முயற்சிக் கின்றதே தவிர எங்களுடைய மக்களின் பிரச்சினை தீர்ப்பது பற்றி அரசாங்கம் ஒரு கவனமும் எடுக்க வில்லை என்று ஜப்பானிய தூதுவர் அகாஷி அவர்களுக்கும் மற்றும் ஜப்பானியத் தூதுவர்களுக்கும் எடுத்துக் கூறி இந்தப்பிரச்சினையை பிரதமமந்திரிக்கும் மற்றும் அரசியற் கட்சிகளுக்கும் எடுத்துக்கூறுமாறு எமது தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அவசரமான பதிலை உடனடியாகத் தராவிட்டால் நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளமாட்டோம் என எமது தலைவர் அவர்கள் கூறினார்.

ஆனால்மாறாக அவர்கள் உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுத்தால் நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்வது பற்றியும் ஜப்பானின் உதவிவழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வது பற்றியும் பரிசீலனை செய்வோம் என்று தலைவர் அவர்கள் எடுத்து விளக்கிக் கூறினார். (பா)

---

### பேச்சுக்களை.....

னால் மட்டும் திட்டங்கள் நிறைவேறாது. அதற்கான நிதி எங்கிருந்து வருகிறது? அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? யார்மூலம் ஒதுக்கப்பட்டது? இந்த நிதியமே இன்னமும் செயற்படவில்லை. இதற்கு இன்னமும் சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதன் சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதில் சிக்கல் இருப்பதாகத் தற்போது கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்தப்பிரச்சினையும் இருக்கிறது.

அடுத்து இதையார் நடைமுறைப் படுத்துவது? என்றொரு பிரச்சினையும் இருக்கிறது. இந்தப்பதினைந்து திட்டங்களையும் ஒவ்வொரு அமைச்சரவையிடம் கொடுத்தால்- அந்த ஊழல் நிறைந்த - அமைச்சர்களிடம் நிதியையும் ஒதுக்கி இதைச் செய்யச்சொல்லி விட்டால் ஒன்றுமே நடக்காது. அங்கு அந்த அமைச்சர்கள் நிதியினை விளையாடிக் கொண்டுபோவார்கள். அல்லது நிர்வாக அதிகாரியிடம் அந்த நிதிபோகும். ஆகவே காலம் காலமாக இலங்கையிலுள்ள பிரச்சினை என்னவென்றால் திட்டங்கள் போடுவார்கள் நிதி ஒதுக்கப்படும் அந்த நிதி அமைச்சுகளிடம் போகும். அவ்வாறு போகின்ற நிதி மந்திரிமாரிடமும் அதிகாரிகளின் பொக்கட்டுகளிலும் போகும். மக்களிடம் சென்றடையாது.

ஆகவே, இப்படியான நடைமுறையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களுக்கு உருப்படியான திட்டங்கள் போடப்பட வேண்டும். நேர்மையான முறையில் நிறைவேற்றப்படவேண்டும் இதனால் மக்கள் பயனடையவேண்டும். இல்லையென்றால் இதில் நன்மையில்லை.

இந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து விலக்குவதும் நோக்கம் எங்களுக்கு இல்லை. யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பது என்ற நோக்கம் எமது இயக்கத் திற்கு இல்லை. தொடர்ந்து சமாதானத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகிறோம். ஆனால் அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் அழுத்தங்களைக்கொடுத்தும் அதன் மூலம் நிதியை எடுத்து எமது மக்கள் பயனடையக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டும். ஏனென்றால் எமது மக்கள் காத்துக்காத்து விரக்தியடைந்து எங்கள் மீதும் அதிருப்தி அடைந்த நிலையில் இருக்கின்றார்கள். இந்தப் பேச்சுவார்த்தை ஒரு பயனுள்ளதாக அமையவேண்டும் என்றால் செயற்திட்டங்களைப் போட்டு உடனடியாக செயற்படுத்தவேண்டும். (பா)

---

## சாவு அறிவித்தல்

### தியாகராசா மெய்கண்டத்தேவன்

நாயன்மார்கட்டைச் சேர்ந்த காலஞ் சென்ற தியாகராசா கண்மணி தம்பதிகளின் இரண்டாவது மகன் மெய்கண்டத்தேவன் 07.05.2003 நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் காலமானார். இவர் சரோஜினி, வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராவதியின் அன்புக் கணவரும் திலீபன் (எழுதுனர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு), பார்த்திபன் (மாவீரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இவரின் இறுதிக்கிரிகைகள் இன்று (08.05.03) பிற்பகல் 3.00 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நடைபெறும்.

**த.முகவரி:**
**7ம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு**

(2282)

**தகவல்:**
**மெ.திலீபன்**
**(மகன்)**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.